திருக்கோவிலூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை பிறப்பிப்பவர்:- திருமதி.வே.லோ.ச.கீதா, B.A.,

ந.க.எண்.997/2023/எப்1 நாள்.08.03.2024

பொருள்: மனைப்பிரிவு – திருக்கோவிலூர் நகராட்சி பகுதி சர்வே எண். எண்.663/1, 663/2 மற்றும் 663/4-ல் 3.98 ஏக்கர் பரப்புள்ள காலியிடத்தை – குடியிருப்பு மனைப்பிரிவுகளாக – அபிவிருத்தி செய்தல் – இறுதி ஒப்புதல் – வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: 1.கள்ளக்குறிச்சி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் ந.க.எண்.P86BU52C/16948/2023/2023/TCP நாள்.14.11.2023

2.கள்ளக்குறிச்சி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி (SWP/DTCP/Kallakurichi/Layout No.075/2023)

3.மனைப்பிரிவு உரிமையாளர் திரு.டி.ரமேஷ், த/பெ.தங்கராஜ், எண். 5, அய்யனார் கோவில் தெரு, ஆர்கேஆர் நகர், அரியாங்குப்பம், புதுச்சேரி அவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பம் நாள். 24.11.2023

4.திருக்கோவிலூர் சார்பதிவு அலுவலக தான ஆவண எண்.6554/2023

5.கள்ளக்குறிச்சி வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் சான்று நாள். 03.11.2023

6.திருக்கோவிலூர் நகராட்சி பொறியாளரின் கோப்பு குறிப்பு நாள்.21.02.2024.

7.மனைப்பிரிவு உரிமையாளர் மனைப்பிரிவிற்கான கட்டணங்களை நகராட்சிக்கு செலுத்திய ரசீது எண். 177/TKI/1/23-24/0013686. நாள்.06.03.2024

8.மனைப்பிரிவு உரிமையாளர் நில மாற்றக் கட்டணம் இணையதளம் வழியாக செலுத்திய ரசீது எண். 2024030601911S, நாள்.06.03.2024

9.திருக்கோவிலூர் நகரமன்ற தீர்மானம் எண்.472 நாள்.08.03.2024.

****

உத்தரவு

திருக்கோவிலூர் நகராட்சிப் பகுதி சர்வே எண். 663/1, 663/2 மற்றும் 663/4-ல் 3.98 ஏக்கர் பரப்புள்ள இடத்தினை குடியிருப்பு மனைகளாக அபிவிருத்தி செய்ய, பார்வை 2-ல் காணும் கள்ளக்குறிச்சி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெற்று, இந்நகராட்சியின் இறுதி ஒப்புதல் கோரி மனைப்பிரிவு உரிமையாளர் திரு.டி.ரமேஷ், அவர்கள் பார்வை 3-ல் காணும் கடிதம் மூலம் விண்ணப்பம் செய்துள்ளார்கள்.

பார்வை 2ல் காணும் தொழில்நுட்ப அனுமதியில், நகரமைப்பு உதவி இயக்குநரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலைகளுக்கான காலியிடம் மற்றும் பொது உபயோக இடங்களை மனைப்பிரிவு உரிமையாளருக்கு பார்வை 4-ல் காணும் தான ஆவண எண் மூலம் திருக்கோவிலூர் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துவிட்டார்.

மேற்படி மனைப்பிரிவில் உள்ள 3.98 ஏக்கர் நிலமும், வேளாண்மை மட்டுமில்லாமல் வேறு வித பயன்பாட்டிற்கு பயன்படுத்தலாம் என கள்ளக்குறிச்சி

வேளாண்மை இணை இயக்குநர் 03.11.2023-ல் அளித்துள்ள சான்றை மனைப்பிரிவு உரிமையாளர் நகராட்சிக்கு சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி மனைப்பிரிவில் தார்சாலைகள், மழைநீர் வடிகால்கள், சிறுபாலங்கள், குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி போன்ற அடிப்படை கட்டமைப்புகள் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளதை பார்வை 6-ல் கண்டுள்ளவாறு திருக்கோவிலூர் நகராட்சிப் பொறியாளர் சான்று அளித்துள்ளார்.

மேற்படி மனைப்பிரிவிற்காக நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களான, தனியார் நிலத்தை தெருக்களாகவும், மனைகளாகவும் பிரிக்க அனுமதி கட்டணம் ரூ.20000/-, கூராய்வு கட்டணமாக ரூ.97000/-, மனையிட அனுமதி கட்டணமாக ரூ.48500/-, கொடிநாள் தொகையாக ரூ.5000/- ஆக மொத்தம் ரூ.1,70,500/-ஐ மனைப்பிரிவு உரிமையாளர் நகராட்சி கருவூலகத்தில் பார்வை 7-ல் காணும் ரசீது எண்களில் செலுத்தியுள்ளார்.

மேற்படி மனைப்பிரிவு அமையப்பெற்றுள்ள சர்வே எண்.665/1-ல் 1.73 ஏக்கர் நிலத்திற்கு நில மாற்றம் கட்டணமாக (Land Conversion Cost) அரசு வழிகாட்டி மதிப்பீட்டில் 3 சதவீத தொகையை உரிய அரசு கணக்கில் இணையதளம் வழியாக செலுத்தி பார்வை 8-ல் காணும் ரசீதை மனைப்பிரிவு உரிமையாளர் சமர்ப்பித்துள்ளார்கள்.

திருக்கோவிலூர் நகரப் பகுதி சர்வே எண். 663/1, 663/2 மற்றும் 663/4-ல் 3.98 ஏக்கர் காலியிடத்தில் அமையப் பெற்றுள்ள 1 முதல் 97 வரையிலான 97 குடியிருப்பு மனைகளை பார்வை 2-ல் காணும் கள்ளக்குறிச்சி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் தொழில்நுட்ப அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளிக்க திருக்கோவிலூர் நகர மன்ற தீர்மாணம் எண்.472, நாள்.08.03.2024-ன் மூலம் அனுமதியளித்துள்ளது.

ஆகவே திருக்கோவிலூர் நகரப்பகுதி, சர்வே எண்.663/1, 663/2 மற்றும் 663/4-ல் 3.98 ஏக்கர் பரப்பில் அமையப்பெற்றுள்ள 1 முதல் 97 வரையிலான 97 குடியிருப்பு மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் கள்ளக்குறிச்சி அவர்களின் தொழில்நுட்ப அனுமதி எண். SWP/DTCP/Kallakurichi/Layout No.075/2023-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

8/3/24

ஆணையாளர்
திருக்கோவிலூர் நகராட்சி

8/3/24

பெறுதல்
திரு.டி.ரமேஷ்,
த/பெ.தங்கராஜ்,
எண். 5, அய்யனார் கோவில் தெரு,
ஆர்கேஆர் நகர்,
அரியாங்குப்பம்,
புதுச்சேரி

நகல் :- உதவி இயக்குநர் , நகர் ஊரமைப்பு கள்ளக்குறிச்சி அவர்களின் தகவலுக்காக அனுப்படுகிறது.
நகல் :- சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருக்கோவிலூர்
நகல் :- வட்டாட்சியர், திருக்கோவிலூர்
நகல் :- நகராட்சி பொறியாளர்/மேலாளர்/நகரமைப்பு பிரிவு/வருவாய் பிரிவு/வருவாய் பிரிவு உரிய காலிமனை வரிவிதிப்பு மேற்கொள்ள வேண்டும்.
நகல் :- The Tamilnadu Realestate Regulatory Authority (TNRERA)
No.1A. I St Floor, Ghandhi Erwin Bridge Road, Egmore- Chennai- 600008